தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1982 மார்ச் 31.

பங்குனி 18, துன்மதி, திருவள்ளுவர் ஆண்டு—2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.''

குற்றமற்றவையாகிய சில சொற்களைச் சொல்லத் தெரியாதவர், உண்மையாகவே பல சொற்களைச் சொல்லிக் கொண்டிருக்க விரும்புவர்.

I. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

1971 ஆம் ஆண்டு அரசு ஆணைப்படி வழங்கப்பட்ட பட்டாக்கள்.

*வினா எண் 665—திரு. கே. [illegible] எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையுளிப்பாரா :

(அ) 1971 ஆம் ஆண்டு 1300/71 எண் அரசு ஆணைப்படி கொடுக்கப்பட்ட பட்டாக்கள் எவ்வளவு? எத்தனை ஏக்கர் ?

(ஆ) மேற்படி பட்டாக்கள் எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே :

(அ) 31–12–1980 ஆம் ஆண்டு வரை மொத்தம் 11,065.90 ஏக்கர் நிலங்கள் 4,674 பட்டாதாரர்களுக்கு அரசு வழங்கியிருக்கிறது.

(ஆ) ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்களைத் தொடர்ந்து அனுபவிப்பவர்கள் யார் என்பதைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமங்களில் வாழ்கின்ற அரிசனங்கள் போன்றவர்கள் பல ஆண்டுக்காலமாக, 50 ஆண்டுகள், 100 ஆண்டுகளாக இருக்கின்ற இடங்கள் சில நேரங்களில் பள்ளவாரி, குட்டைப் புறம்போக்கு என்று — அப்படி இல்லை என்றாலும் — ரெவின்யூ ரிக்கார்டில் அப்படி வருவதால் ரெவின்யூ போர்டு வரை, அரசு வரை வந்து பட்டாக்கள் ஆக்கப்பட மிக மிகக் காலதாமதம் ஆகிறது. அவைகளையெல்லாம், குறிப்பிட்ட கால அளவிற்கு குடியிருந்து, குடியிருக்கத் தகுதியான நிலமாக இருந்தால் வரை முறைகளைத் தளர்த்தி பட்டா வழங்குவதை எளிதாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள் வழங்கப்படுவது சம்பந்தமானது இது. ஆனால் உறுப்பினரவர்கள் கேட்பது, புறம்போக்கு நிலங்கள், மற்றவைகளைப் பற்றி இருக்கின்ற நிலமைகளைப் பற்றி. அதைப்பற்றி முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். ஆக்கிரப்புச் செய்யப்பட்ட இடம் அரசுக்குத் தேவையில்லை என்றால், பொது ஸ்தாபனத்திற்குத் தேவை இல்லை என்றால் விரைவில் முடிவெடுக்க அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது. இன்னும் விரைவிலே செய்யும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது அரசு சார்பிலே நிறையப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல பத்து வருடங்கள், பதினைந்து வருடங்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, விவசாயம் செய்து கொண்டு வரும் ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ், ஷெட்யூல்ட் காஸ்ட் இதுபோன்ற இனத்தவர்கள் இருக்கிறார்கள். 15 வருடங்களாக ஆக்கிரமிப்புச்செய்தும் இவர்களுக்கு இன்னும் பட்டா வழங்காத நிலையில் இருக்கின்றார்கள். இதை அரசு பரிசீலித்து அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, ஆக்கிரமிப்புச் செய்தும் அவர்களுக்கு இன்னும் பட்டா கொடுக்கவில்லை என்று உறுப்பினரவர்கள் சொல்வதைப் பார்த்தால் ஏதோ ஆக்கிரமிப்புச் செய்தது என்பது சட்ட ரீதியாக ஆக்கிரமிப்பு செய்ததுபோன்று அவர்கள் எண்ணுகிறார்களா என்பது தெரியவில்லை. ஆக்கிரமிப்பு என்பதே சட்டத்தை மீறுகின்ற ஒன்றாகும். ஆனால் சட்டத்தை மீறிச் செய்தாலும் அரசுக்குத் தேவையில்லை என்றால் பரிவோடு கவனித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாழத்தப்பட்ட மக்களுக்கு இரண்டாண்டுகளுக்கு முன்பு பட்டாக்கள் கொடுக்கப்பட்டும் அந்தப் பட்டா கொடுக்கப்பட்ட இடத்தை அனுபவிக்க முடியாத அளவில் விவசாயம் செய்து

1982 மார்ச் 31]

கொண்டிருக்கிறார்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள். எனவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் முறையில் பட்டா கொடுக்கப்பட்ட இடத்தைத் திரும்பவும் அனுபவிக்கும் அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது எனக்கு வருத்தத்தைத் தருகிறது. நான் இதைத் தெரிவிப்பதற்குக் காரணம், பட்டாக்களை அவர்களை அழைத்து வைத்து கூட்டங்களில்—பொது நிகழ்ச்சிகளில் பட்டா கொடுப் பது வீண் வேலையாக உள்ளது. பட்டாக்களைக் கொடுத்து அன்றோ அல்லது மறுநாளோ அதை அவர்களிடத்தில் ஒப் படை செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. பட்டா கொடுப்பதற்கு முன்னாலே கிராமக் கணக்கில் அது எழுதப்பட்டாக வேண்டுமென்று சொல்லி இருக்கிறது. எங்கே யாவது அது மீறப்பட்டிருக்கிறது என்றால், அரசாங்கத்தின் எண் ணத்தை நிறைவேற்றாத அரசு அதிகாரிகள் மீது இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. எஸ். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமீன் ஒழிப்புக்குப் பிறகு பயிரிடுபவர்களுடைய, நிலத்தை—ஜமீன் ஒழிப்பிற்குப் பிறகு ஜமீன்தாரர்களுடைய ஏஜென்டுகள், அதை தங்களுடைய பத்திர அதிகார பூர்வத்தை வைத்துக் கொண்டு விலைக்கு விற்றுவிட்டார்கள். ஜமீன் ஒழிப் புக்குப் பிறகு உடையார்பாளையம், சிதம்பரம், மாயவரம் தாலூகா, கடலங்குடி போன்ற இடங்களில் ஜமீன் ஒழிப்புக்குப் பிறகு பயிர் செய்து கொண்டிருந்தாலும், ஜமீன்தாரர்களுடைய ஏஜன்டுகளாக இருந்தவர்கள் வேறு ஒருவருக்கு விற்றுவிட்டதால் அவர்கள் அந்த இடங்களை அனுபவிக்க முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? இப்படிப்பட்ட நிலைமையில் உண்மை யாகப் பயிரிடும் குடிமகனுக்கு அந்த நிலங்களைக் கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு. திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஜமீன்தாரர்களுடைய ஏஜன்டுகள் செய்த தவறு அரசுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் சும்மா இருந் திருக்காது. அதற்குப் பிறகு இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட் டிருந்தால், பயிர் செய்பவர்கள் மனுக்களைக் கொடுத்தால் உட னடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.